250_252_Tamil 04-11-2004 13:41 Pagina 250

*Summaries in Tamil*
*Intervention 2004, Volume 2, Number 3, Page 250 - 252*

# Summaries in Tamil

**நேபாளத்தின் பராமரிப்புத் தொகுதிகளிலே உளவளத் துணையையும் இணைத்துக்கொள்ளல்**

அநேகமான மேற்கலகம் அல்லாத நாடுகளிலே இருப்பதைப் போலவே, நேபாளத்தின் பராமரிப்பு வழங்குகின்ற பல்வேறுபட்ட நிறுவனங்களின் பணிகளிலேயும், உள சமூகத் திட்டங்கள் முறையாக இணைத்துக்கொள்ளப்படாத ஒரு நிலைமையே காணப்படுகிறது. இந்த இணைப்பினால் தேவை மதிப்பீடு, பயிற்சி என்பன தொடக்கம், உண்மையான சேவை வழங்குதல் வரை இலகுவாகக்கூடிய ஒரு வழி ஏற்படுகிறது. இந்நிலையிலே, அவ்வாறான ஓர் இணைப்புப் படிமுறைகளிலே ஏற்படக்கூடிய நடைமுறை சார்ந்த, கொள்கை சார்ந்த விடயங்களைப் பற்றியதான ஒரு ஒளிக்கீற்றினை வழங்குவதை இந்தக் கட்டுரை தனது நோக்காகக் கொண்டிருக்கிறது. மேலும், இந்தக் கட்டுரை தற்போது நேபாளத்தில் நடைமுறையிலுள்ள உளசமூக உளவளத்துணை வழங்கலைப் பற்றி விவரிப்பதுடன், மேற்பார்வை, உளவளத்துணை மேம்பாடு மற்றும் சமூக நடைமுறைப்படுத்தலுக்குத் தேவையான திறமையான வேலைத் திட்டங்கள் என்பவற்றின் போதாமைகளைப் பற்றியும் விவரிக்கின்றது.

முக்கிய சொற்பதங்கள்: உளவளத்துணை, உளசமூகத் திட்டங்கள், பயிற்சி, சித்திரவதை

**அகதி நெருக்கடி நிலையில் உள சமூகத்தலையீடுகளுக்கான ஒரு திட்ட வரைபு: ருவாண்டா அகதி முகாம்களில் கிடைத்த முன் அனுபவங்கள்**

இந்தக் கட்டுரை, குறைந்தளவு வருமானமுள்ள நாடுகளில் முகாம்களிலே வாழுகின்ற அகதிகளுக்கான உள சமூகத் தலையீட்டிற்குரிய எண்ணக்கருச்சட்டகத்தைப் பற்றியும், அதனுடைய பிரயோக வேலைத்திட்ட மாதிரி பற்றியும் விவரிக்கின்றது. இந்தத் தலையீட்டினுடைய முக்கிய இலக்காக உளசமூகப் பிரச்சினையுள்ள தனிமனிதர்களை மீளவும் சமூகத்துடன் இணைத்துக்கொள்ளல் என்பது உள்ளது. இந்த வேலைத்திட்ட மாதிரி, 1994ம் ஆண்டு ருவாண்டாவில் நடைபெற்ற இன ஒழிப்பிலிருந்து தப்பிப் பிழைத்து முகாம்களிலே இருந்தவர்களுக்கான முன்னோடித் திட்டங்களிலே பிரயோகிக்கப்பட்டது. ஆயினும் இந்த முன்னோடித்திட்டம் முகாம்களில் இருந்த பாதுகாப்பின்மை, அதனால் ஏற்பட்ட நம்பகத் தன்மையற்ற சூழ்நிலை மற்றும் சமூக சேவைகளின் போதாமை என்பவற்றினால் மிகவும் பாதிக்கப்பட்டது. உளக்கல்விக்கான விடயங்களைத் தயாரிப்பதில் எதிர்பார்க்கப்பட்டதற்கும் அதிகமான நேரம் எடுத்தது.
மருத்துவப்பணியாளர்கள் உள சமூக எண்ணக்கருக்களுக்கும் பயிற்றுவிக்கப்படுவதற்கு இலகுவில் தயாராக இருக்கவில்லை. ஒரு தெளிவாக வரையறுக்கப்பட்ட இலக்குக் குழு, அதற்கு வழங்கப்போகின்ற ஆதரவு என்பவை பற்றிய திட்ட வரைபுகளையும், அவை தொடர்பான தெளிவான

250_252_Tamil 04-11-2004 13:41 Pagina 251



வேலைத்திட்டங்களையும் வைத்திருக்கவேண்டிய தேவைப்பாடுபற்றி இந்தத் திட்டங்களின் வழியே தெளிவாகத் தெரிந்தது.

**முக்கிய சொற்பதங்கள்:** அகதிகள், உளசமூக, உளநலம், இனஒழிப்பு, ருவாண்டா

**மனவடுவுக்குள்ளான அகதிகளின் பெற்றோர்- பிள்ளை உறவுகளிலே தெளிவான அடைவுகளை உருவாக்குதல்**

மனவடுவுக்குள்ளான அகதிகள் மிகவும் களைத்துப்போய், சக்தியிழந்து, குழம்பிப் போனவர்களாக ஒரு புதிய நாட்டை அடைவார்கள். அதற்கும் மேலாக, சட்டபூர்வமான குடியுரிமை பெறுதல், புதிய தொழிலொன்றையும் புதிய கலாசாரப் பாதையையும் கற்றல், இருப்பிடம் கண்டுபிடித்தல், வேலைவாய்ப்பு போன்ற இன்னோரன்ன புதிய சவால்களையும் அவர்கள் எதிர்கொள்வர். இவ்வாறான எல்லாவிதச் சுமைகளோடும் இருக்கின்ற பெற்றோரில் அநேகர், தங்கள் பிள்ளைகளுக்கு - வேரோடு பிடுங்கியெறியப்பட்டு, உணர்ச்சிகளுக்குள் மூழ்கியிருக்கின்ற தங்கள் பிள்ளைகளுக்கு - தேவைப்படுகின்ற ஆதரவை மிகக்குறைந்தளவிலேயே வழங்கக்கூடியவர்களாக இருப்பர்.

இந்தக் கட்டுரை, உணர்ச்சிகளிலிருந்து விடுபட்டிருக்கின்ற இவ்வாறான பெற்றோரை அதிகம் வருத்தாது நடைமுறைப்படுத்தக்கூடிய சுலபமான, செலவில்லாத சில தலையீடுகளைப்பற்றி விவரிக்கின்றது. இந்தத் தலையீடுகள் பெற்றோர் - பிள்ளை உறவுகளை மேம்படுத்தலுடன், பிள்ளைகளின் அறிகை மற்றும் மனோபாவ விருத்திகளையும் உற்சாகப்படுத்துகிறது. இங்கு விபரிக்கப்படும் செயற்பாடுகள் சிறுவர்களுக்குத் தேவையான பொம்மைகள் மற்றும் விளையாட்டுப்பொருட்கள் கிடைக்கப்பெறாத யுத்தப் பிரதேசங்கள், அகதி முகாம்கள் போன்ற இடங்களில் நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருக்கின்றன. இதன்மூலம் பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையிலான நல்ல உறவுகளையும், பிள்ளைகளுடைய வயதுக்கேற்ற திறன்களையும், ஒட்டுறவாடல்களையும் விருத்தி செய்யலாம்.

**முக்கிய சொற்பதங்கள்:** சிறுவர் விருத்தி, பெற்றோர்- பிள்ளை உறவு, விளையாட்டு நடவடிக்கைகள், அகதிகள், மனவடு

**சமூக நடவடிக்கைகளுக்கான கதைசொல் அரங்கு: உள சமூகப் பணியாளர்களுக்கான ஒரு திறன்**

இந்தக் கட்டுரை கதைசொல் அரங்கினுடைய பொதுப்பயன்பாட்டைப் பற்றியும், அதனை வழிப்படுத்துபவர்களுக்குத் தேவையான திறன்களைப் பற்றியும் விவரிக்கின்றது. இங்கு முகாமைத்துவம், களமேற்பார்வை, தொடர்ச்சியான பயிற்சி போன்றவற்றை உள்ளடக்கியதான கட்டமைப்பு உதவி பற்றி கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், களத்தில் இருந்து பெறப்பட்ட ஓர் உதாரணம் மூலம், இதனுடைய செயன்முறைப்பிரயோகம் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

முக்கிய சொற்பதங்கள்: கதைசொல் அரங்கு, கூட்டு நடத்தை மாற்றம், கூட்டுத் திறம், சமூக நடவடிக்கை, உளசமூகத் திட்டம்

250_252_Tamil 04-11-2004 13:41 Pagina 252

*Summaries in Tamil*
*Intervention 2004, Volume 2, Number 3, Page 250 - 252*

**கள அறிக்கை மனவடுவுக்குட்பட்ட கட்டிளமைப் பருவ அகதிகளுக்கான ஒரு சிகிச்சையளிக்கும் பயிற்சி நிகழ்வு**

இந்தக் கட்டுரை, மனவடுவுக்குட்பட்ட கட்டிளமைப் பருவத்தினர் தங்களுடைய பயங்கரக்கனா அனுபவங்களை எதிர்கொள்வதற்கு உகந்த ஒரு சிகிச்சையளிக்கும் பயிற்சி நிகழ்வைப் பற்றி விவரிக்கின்றது. இந்தப் பயிற்சி, அகதிகளுடைய முறைப்பாடுகளோடும், நோய்க் குணங்குறிகளோடும் நேரடியாகத் தொடர்புபடுகிறது. இதன் விளைவாக, அவர்கள் தங்களது கையறு நிலையைச் சற்றுக் குறைவாக உணர்ந்து கொள்வார்கள். சில வேளைகளில், இந்தப்பயிற்சி நிகழ்வானது, மனவடு அனுபவங்களைக் கலந்துரையாடுகின்ற சிகிச்சையொன்றை நோக்கிய செல்வழியாகவும் வந்துவிடக்கூடும்.

**முக்கிய சொற்பதங்கள்:** கட்டிளமைப் பருவத்தினர், உடனொருவரில்லா இளம் பராயத்தினர், நெருக்கீட்டிற்குப் பிற்பட்ட மனவடு நோய்

**படைவீரர்களை மீள இணைத்துக் கொள்ளல் - தொலைந்து போன காய்**

இந்தக் கட்டுரையானது, தென் ஆபிரிக்காவிலுள்ள ஜொகனெஸ்பேர்க் என்னுமிடத்தில் வன்முறை, மீளிணக்கப்பாடு என்பவற்றை ஆய்வு செய்யும் நிலையத்தினுடைய மனவடு சிகிச்சை நிலையத்தினால் நடத்தப்பட்ட ஒரு சுய ஆதரவுக் குழுவினுடைய தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்த நிலையம் மூன்று மாத கால அளவுடையதும், உள சமூகத் தலையீடுகளை உள்ளடக்கியதுமான தீவிர தொழிற் பயிற்சி ஒன்றினை வழங்குகிறது. உள சமூகத் தலையீட்டிலே கிழமையொன்றுக்கு இரண்டு மணித்தியாலங்கள் உளக் கல்வி நிகழ்வும், இரண்டு மணித்தி-யாலங்கள் ஆதரவுக்குழுத் தலை-யீடும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான தலையீடுகளைப் படை வீரர்களுக்கு அளிக்காத சந்தர்ப்பங்களில் எழுகின்ற விளைவுகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது. அத்துடன், யுத்த கால ஞாபகங்களை விட, தங்களுக்கும் தங்களது குடும்பம் மற்றும் சமூகத்துக்கும் தேவைப்பட்ட உள சமூகத் தலையீடுகள் கிடைக்கப்பெறாமையே பெரிய துன்பமாக இருந்தது என்று முன்னாள் படைவீரர்கள் இந்த ஆதரவுக்குழுக்களிலே தெரிவித்தமையையும் இந்தக் கட்டுரை சுட்டிக்காட்டுகின்றது. இறுதியாக இந்தப் பிரச்சினையை எவ்வாறு கையாளலாம் என்பதுபற்றிய ஆலோசனைகளும் முன்மொழியப்பட்டிருக்கின்றன.

**முக்கிய சொற்பதங்கள்:** முன்னாள் படை வீரர், சமூக நெருக்கடி, உள நெருக்கடி, சமுதாய உதவி, சிகிச்சைசார் உதவி